எந்தெந்த புரோகிராமுக்குக் கட்ட வேண்டும் என்ற அந்த அடிப்படையிலே இந்த மருத்துவமனைக்கு முன்னேற்றத்திற்காகக் கொடுக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 263, திரு. ஆர். முருகையா பாண்டியன், இருக்கையில் இல்லை.

வினா எண் 264, திரு. நா. சா. பழனிசாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

264—

பொள்ளாச்சியிலிருந்து கிணத்துக்கடவுக்கு நகரப்பேருந்து விடுதல்.

*** 10970**-*திரு. நா. சா. பழனிசாமி:*

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பொள்ளாச்சியிலிருந்து வடக்கிபாளையம் சாலையில் சென்று குள்ளிசெட்டிபாளையம், சந்தேகவுண்டன்பாளையம் வழியாக கிணத்துக்கடவுவரை புதிதாக ஒரு நகரப் பேருந்து விட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சாலை சரியில்லாத காரணத்தால் பேருந்து இயக்க இயலாது.

திரு. நா. சா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டுள்ள குள்ளிசெட்டிபாளையம், சந்தேகவுண்டன்பாளையம் கிராமங்கள் வடக்கிப் பாளையம் சாலைக்கும் கோவை-பொள்ளாச்சி சாலைக்கும் இடையிலே உள்ளே தள்ளி இருக்கின்ற கிராமங்கள். அந்த கிராமங்களை இணைக்கின்ற சாலை தற்போது ஒன்றியச் சாலையாக இருக்கிறது. இப்போது ஓரளவுக்கு நல்லமுறையிலே அந்த ரோடுகளைச் சரி செய்திருக்கிறார்கள். இப்போது அதை விட மிக மோசமான சாலைகளில் எல்லாம் பஸ்கள் சென்றுகொண்டிருக்கின்றன. நெடுஞ்சாலையோடு நேரடித் தொடர்பற்று இருக்கின்ற இந்தக் கிராமங்களுக்கு பேருந்து வசதி ஏற்படுத்துகின்ற வண்ணம் மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் இந்த வழித்தடத்தில் புதிய பேருந்தை விடுவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபோது இதைவிட மோசமான சாலைகளில் எல்லாம் பேருந்து இயக்கப்படுகிறது

1994 ஏப்ரல் 13]

என்று சொன்னார்கள். அதற்கு நன்றி. இயக்கப்படுகின்ற பேருந்தை நிறுத்தக் கூடாது என்ற அடிப்படையிலேதான் மோசமான சாலையாக இருந்தாலும் இயக்கிக்கொண்டிருக்கிறோம். புதிதாகப் பேருந்துகளை இயக்குகிற சாலைகளைச் சிறப்பான முறையிலே சீரமைத்த பிறகுதான் இயக்கவேண்டும் என்று அந்தத் துறைக்கு அரசின் சார்பாகக் கட்டளைக் பிறப்பித்த காரணத்தினாலேதான் நீங்கள் குறிப்பிடுகிற கிராமத்திலே 1052 பேர் ஜனத்தொகை இருந்தாலும்கூட 1.1 கிலோ மீட்டர் இருந்தாலும் அந்தச் சாலை சரியான சாலையாக இல்லாத காரணத்தினாலே இயக்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. நா. சா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சாலையை கிராமச்சாலைகளின்கீழ் எடுத்து அதைத் தார்ச் சாலையாக மாற்றுவதற்கான கோரிக்கையை நான் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களுக்கு வைத்திருக்கிறேன். ஜே. வி. வி. டி. திட்டத்தின்கீழ் அந்தச் சாலை இப்போது ஓரளவுக்கு சரி செய்யப்பட்டிருக்கிறது. அநேகமாக அந்தத் தகவல் அமைச்சர் அவர்களுக்குத் தெரிந்திருக்காது என்று நினைக்கிறேன். எனவே அந்தச் சாலையை நேரடியாக பி.டி.சி. நிறுவனம் பார்வையிட வைத்து அங்கே பேருந்துகளை விடுவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கிராமச் சாலைகள் திட்டத்திலே எடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அந்தப் பணிகள் முடிந்தவுடனேயே மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் அரசு அடுத்த நாளே பேருந்தை இயக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 265, திரு. வே. தம்புசாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

265—

திருவாரூர் தொகுதி, சாட்டியகுடியிலிருந்து முப்பத்தி கோட்டகம்வரை நகரப் பேருந்து இயக்குதல்

*** 20007**-திரு. வே. தம்புசாமி:*

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் தொகுதி, சாட்டியகுடியில் இருந்து முப்பத்தி கோட்டகம் வரை நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?